TAMIL NADU LEGISLATURE LIBRARY
6 NOV 1972
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றம்

வெள்ளிக்கிழமை, 1972 ஆகஸ்ட் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில், மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

1. இரங்கற் குறிப்பு.

திருவாளர்கள் டி. சஞ்சீவையா, கே. உப்பி சாகிபு அவர்கள் இயற்கை எய்தியது குறித்து

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: திரு. டி. சஞ்சீவையா அவர்களும், திரு. கே. உப்பி சாகிபு அவர்களும் இயற்கை எய்தினர் என்பதை நான் இந்த அவைக்கு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. சஞ்சீவையா அவர்கள் 1952 லிருந்து 1953 வரை பிரிவினையாகாத சென்னை மாநிலத்தில் அமைச்சராய் இருந்தார். ஆந்திரப் பிரதேசத்தின் அமைச்சராகவும், பின்னர் அதன் முதல் அமைச்சராகவும் விளங்கினர். 1962 லிருந்து 1964 வரையிலும், பின்னர் 1971 லிருந்து 1972 வரையிலும் காங்கிரஸ் தலைவராக இருந்தார். 1964 லிருந்து 1971 வரையில் மத்திய அமைச்சராகப் பதவியிலிருந்தார்.

திரு. கே. உப்பி சாகிபு அவர்கள் 1923 முதல் 1930 வரையிலும், பின்னர் 1949 முதல் 1952 வரையிலும் சட்ட மன்ற மேலவை உறுப்பினராக இருந்தார். அவர் ஒரு புகழ்பெற்ற முஸ்லீம் லீக் தலைவராக விளக்கினர். மத்தியச் சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், பிரிவினையாகாத சென்னை மாநிலத்தின் சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும் இருந்தார்.

இவர்களது மறைவினால் வாடும் அன்னாரது குடும்பத்ினருக்கு இந்த அவையின் சார்பில் நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறேன்.

மறைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இரண்டு நிமிடங்கள் அமைதியாக எழுந்து நிற்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

(அவையினர் இரண்டு நிமிடங்கள் மவுனமாய் எழுந்து நின்றனர்.)